[1987 எப்ரல் 10

நாகர்கோவில் வானொலி நிலைய ஒலிபரப்பு.

316—(*வினா எண் 6694) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வானொலி நிலைய ஒலிபரப்பு சக்தியை அதிகரிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் 2 100 கிலோ வாட் உயர் சக்தி கொண்ட வானொலி நிலையம் நிறுவ இருப்பதாலும், திருநெல்வேலியில் 10 கிலோ வாட் சக்தி கொண்ட வானொலி நிலையம் இயங்கி வருவதாலும், மேலும் நாகர்கோவிலில் ஒரு குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கப்படவிருப்பதாலும், தற்போது நாகர்கோவிலில் உள்ள 1 கிலோ வாட் திறன் கொண்ட வானொலி நிலையம் இயங்கி வருவதன் மூலம், நாகர்கோவிலைப் பொறுத்த மட்டில் "Media Coverage" நிறைவாக இருப்பதால் இதன் சக்தி அதிகரிக்கும் அவசியம் எழுவில்லை என்று வானொலித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம் அம்மையப்பன் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம்.

317—(*வினா எண் 10534) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியத்தைச் சார்ந்த அம்மையப்பன் கிராமத்தில் புதிதாக ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியத்தைச் சார்ந்த அம்மையப்பன் கிராமத்தில் ஏற்கனவே ஒரு கால்நடை கிளை நிலையம் இயங்கி வருகிறது. இந்தக் கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாக மாற்றும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.